# ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,124 சித்திரை மாதம்

# "இந்துமதமான தமிழருடைய சித்தர் நெறியைப் பரப்பிட உதவுங்கள்!"



இந்துமதப் பத்தர்கள் கோயில்களில் பெரிய பெரிய விழாக்களை செய்வதுதான் புண்ணியம் என நினைக்கின்றார்கள். ஆனால், அந்த கோயில்களின் அடிப்படையும், உயிர்நாடியும், செயல்நிலையும் ஆன பதினெண்சித்தர்களுடைய நூல்களை அச்சிட்டு வெளிக் கொணருவதிலும்; அந்த நூல்களில் உள்ள கருத்துக்களை எல்லா இடங்களிலும் எடுத்துக் கூறி விளக்கம் கூறுவதிலும்தான் இந்துமதத்தின் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் இருக்கின்றது.

அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

# உள்ளுறை

1. **“அருள்வாக்குப் பணி பற்றிய விளக்கம்”** - வெண்ணந்தூரைச் சேர்ந்த சித்தரடியானுக்கு குருதேவர் அவர்கள் அருள்வாக்குப் பணி செய்யும் முறையை விளக்கி எழுதிய அஞ்சல்.
2. **“அடியானுக்கு குருதேவரும், கொள்கைகளும், குறிக்கோள்களும்தான் முக்கியம்”** - இராசிபுரத்தைச் சேர்ந்த சித்தரடியானுக்கு குருதேவர் கூறி தலைமைப்பீடத்திலிருந்து எழுதப்பட்ட செயல்விளக்க அஞ்சல்.
3. **“மெய்யான இந்துமதத்தின் தத்துவம்”** - வேம்படிதாளத்தைச் சேர்ந்த சித்தரடியானுக்கு குருதேவர் எழுதிய வாழ்த்துத் திருவோலை.
4. **“தமிழருடைய சித்தர்நெறியைப் பரப்பிட உதவுபவர்கள் தேவை!”** - வெண்ணந்தூரைச் சேர்ந்த சித்தரடியானுக்கு குருதேவர் அவர்கள் அருட்கோட்டத்தை அமைத்துப் பூசைகளை நடத்தும் விதங்களை விளக்கி எழுதிய அஞ்சல்.
5. **“காலக்கணக்கீட்டு அடிப்படையில் கடவுள்களை விளக்கிடும் முதல் அருளாளரே குருதேவர்”** - திருவையாறைச் சேர்ந்த சித்தரடியானுக்கு குருதேவர் அவர்கள் தமது முயற்சிகளை விளக்கி அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரர்கள் பலரை புதிதாக உருவாக்குமாறு ஊக்கம் தந்து எழுதிய விளக்க அஞ்சல்.
6. **“குருதேவர் எழுதிய அஞ்சல்களிலிருந்து எடுக்கப்பட்ட சில வாசகங்கள்”** - இதே காலக்கட்டத்தில் குருதேவர் சில அடியான்களுக்கு எழுதிய அஞ்சல்களில் உள்ள சில வாசகங்கள்.

# அருள்வாக்குப் பணி பற்றிய விளக்கம்

தலைமைப்பீடம்,
21-9-1989.

அருள்மிகு மேற்கு மண்டல நிர்வாகக் குழு இணைச் செயலர் அருள்மிகு வெண்ணந்தூர் ஏழு முனீசுவரர்கள் சன்னிதானம் சித்தரடியான் திரு K.அருணாசலம் (6/135, மாரியம்மன் கோயில் தெரு, வெண்ணந்தூர் - 637505) அவர்கள் அருட்சமூகத்திற்கு ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி தலைமைப்பீடம் விடுக்கும் மடல்.

(1) அனைத்தும் குருவின் செயலே! தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன் திருவருளே!

(2) தங்களின் 19ஆம் தேதியிட்ட அஞ்சலும், ஆத்தாள் தேவி சமயபுரத்து மாரியம்மனின் அருளூறு பூசனைப் பொருளும், நண்பர் திரு இரா. வெங்கடேசனின் அஞ்சலும் கிடைத்தது. குருதேவர் படித்துப் பார்த்துக் கூறிய கருத்துக்களை இங்கு குறிப்பிடுகின்றோம்.

(3) தாங்கள் நீண்ட நெடிய நாட்கள் கழித்து குருதேவருடன் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள். இனிமேலாவது வாரம் தவறாமல் ஒரு அஞ்சலையாவது தங்களால் இயன்ற குருகாணிக்கையாக 25np, 35np, 50np, 60np அஞ்சல் தலைகளுடன் எழுதுங்கள். உரிய பாதுகாப்பு கிடைக்கும்.

(4) தாங்கள் சமயபுரம் சென்று தேவி சமயபுரத்து மாரியம்மனை வழிபட்டு, சிறப்பு அருட்சினை செய்து அனுப்பிய பூசனைப் பொருள் மிகச் சிறப்பாக இருந்தது. குருதேவர் தமது மகிழ்ச்சியை தெரிவித்து வாழ்த்துத் தெரிவிக்கிறார். கவலை வேண்டாம்.

(5) தங்கள் இல்லத்தில் மேற்கு மண்டலத்திலேயே முதன்முதலாக **குருமாரியம்மன் அருள்வாக்கு மையம்** வைத்துச் செயல்படுவது குறித்து மகிழ்ச்சி, வாழ்த்து. முழுமையான பாதுகாப்புக்கள் வழங்கப்படுகின்றன. கவலை வேண்டாம்.

(6) யார் அருள்வாக்கு கேட்க வந்தாலும் பூவும், குங்குமமும் வாங்கி வரச் சொல்லுங்கள். பூவை திரிசூலத்தில் அணிந்து விடுங்கள். யாகம் வளர்த்து அருட்சினை மந்திரம் (வாஞகி மண்ஞகி ... எனத் தொடங்குவது) தங்கள் வசதி போல் ஒவ்வொரு நபருக்கும் ஒரு முறை கூறி; பிறகு அவர்கள் கொண்டு வந்துள்ள குங்குமத்தை வாங்கி 18 முறை தாத்தாக்களையும், ஆத்தாக்களையும், குருமாரியம்மனையும் வேண்டி; 18 முறை அவர்களுடைய பெயரைச் சொல்லி குங்குமத்தை திரிசூலத்தின் மீது போடுங்கள். முடிந்தால் அவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர், வயது, பெயர் முதலியவைகளையும் சொல்லுங்கள். இதற்கு ரூ.5/- மட்டும் காணிக்கை வாங்குங்கள். இதை உண்டியலில் சேர்த்து வைத்து அனுப்புங்கள். அல்லது அவ்வப்போது அனுப்புங்கள். ஆனால், ஒரு மாதத்திற்கு மேல் குரு காணிக்கை அங்கு இருக்கக் கூடாது. ஒவ்வொருவரிடமும் M.O. charge அவர்களிடமே வாங்கிக் கொள்ளுங்கள்.

தாங்கள் ***'சென்னை காரனோடை கருகுலத்தில் எழுந்தருளி அருளாட்சி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் குருமாரியம்மனே என் மூலம் அருள்வாக்குச் சொல்லுங்கள்'*** என மனதுக்குள் வேண்டிக் கொள்ளுங்கள். இது பற்றி பயிற்சி எடுத்துக் கொள்ள

வேண்டும் என்ருல், ஏதாவதொரு சனி, ஞாயிறு வந்து தங்கிப் பயிற்சி பெற்றுப் போகலாம்.

நீங்கள் பூசையின் போது குருமாரியம்மனே வேண்டியதும், உங்களே அறியாமல் அருள்வாக்கு சொல்ல வரும். சொல்ல வராவிட்டால் கவலேப்பட வேண்டாம். வந்திருப்பவர்களே மூன்று கேள்விகளே ஒரு தாளில் எழுதி, அவர்களுக்காக பூசை செய்யும் போது உங்கள் மனதில் அந்த விஞக்களுக்கு என்ன விடை தோன்றியது என்ற கருத்தையும் எழுதி, திரிசூலத்தின் மீது தூவப்பட்ட குங்குமத்தில் வந்திருப்பவரையே ஒரே ஒரு சிட்டிகை (மூக்குப்பொடி எடுப்பது போல்) குங்குமம் எடுத்துத் தரக் கூறி ஒரு நீண்ட கவருக்குள் வைத்து அனுப்புங்கள். பதில் அனுப்புவதற்கு ரூ.2க்குரிய தபால்தலே வாங்கி உள்ளே வைத்து அனுப்பக் கூறுங்கள். அல்லது நீங்களே அனுப்பலாம். அவர்களிடம் **<u>களவு, காணுமல் போனது என்ற இரண்டு மட்டும் சித்தர் நெறிப்படி அருள்வாக்கில் சொல்லப்படாது</u>** என்பதை மட்டும் எடுத்துச் சொல்லி விடுங்கள். சின்ன போர்டிலும் எழுதி வைத்திடுங்கள்.

**<u>செயல்விளக்கம்</u>:-**

அவர்கள் ஏதாவது தொழில் பற்றியோ, திருமணம் பற்றியோ, நோய் பற்றியோ, புதிய தொழில் பற்றியோ .... தொடர்ந்து மூன்று கேள்விகள் கேட்கலாம். ஒன்றைப் பற்றித்தான் மூன்று கேள்விகளும் அமையலாம்.

(அ) இயற்கையாக ஏற்பட்டதா? ஊழ்விஜோயா? விதியா? மந்திரவாதிப் பாதிப்பா?

(ஆ) உலகியல் காரணமாக ஏற்பட்டதா?

(இ) இவை செய்யலாமா? செய்யக் கூடாதா? எப்பொழுது செய்யலாம்?

(ஈ) இதற்குப் பரிகாரம் உண்டா?

(உ) இதைச் செய்தால் நன்மை ஏற்படுமா? அல்லது வேறு எப்படிச் செய்யலாம்? ...

இது போன்ற விஞக்களுக்குத்தான் பதில் கொடுக்கப்படும். இதுதான் அருள்வாக்கு என்பது. மற்றவர்கள் கூறுவது போல் நாம் குறிகாரர்கள் அல்ல! சோதிடர்கள் அல்ல! இதை முதலில் எல்லோருக்கும் நன்கு விளக்கி விட்டே சொல்லுங்கள். ஏனென்றல் நமக்கு எதிரிகளாக இருப்பவர்கள் நம்மைப் பற்றி அனுவசியமாக குறை கூறிடக் கூடாது. ஏழை எளிய மக்கள் எல்லோருக்கும் உதவ வேண்டும் என்பதற்காகத்தான் அருளுலகத்தவர்களின் கருத்துப்படி ரூ.5/- மட்டும் காணிக்கை வாங்கப்படுகிறது.

**குறிப்பு:-** அருள்வாக்கு என்பது மிகச் சுருக்கமாகத்தான் எழுதி அனுப்பப்படும். அருட்கணிப்பு போல் விரிவாக வரும் என்று எதிர்பார்த்து விட வேண்டாம். சென்னே காரஞேடை குருமாரியம்மனின் அருள்வாக்கு கூறுவது பற்றி அச்சடித்த அறிக்கை மாதிரி அனுப்பியுள்ளோம். இதேபோல் தாங்கள் தங்கள் முகவரி போட்டு அச்சடித்து பொதுமக்களுக்கு வழங்கலாம். அருள்வாக்குப் பணி செய்யுங்கள். அதஞல், அருளுலக அறிமுகமும், பாதுகாப்பும் கிடைத்திடும். இதைப் புரிந்து செயல்படுங்கள். எதற்கும் கவலேப்பட வேண்டாம்.

குருதேவர் உங்களே மிகவும் மதிக்கின்றூர், விரும்புகின்றூர், நம்புகின்றூர். தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளும், அம்மையப்பன்களின் துணேயும் உங்களுக்கு எப்போதும் உண்டு. எந்தத் தனிமனிதர்கள் பற்றியும் கவலேப்படாமல் இயக்க வளர்ச்சிக்கு பாடுபடுங்கள். யாரையும் கடிந்து பேசாதீர்கள். அனேவருடனும் கனிவாகப் பேசுங்கள். தலேமைப்பீடத்தில் இருந்து அவ்வப்போது விளக்கம் அனுப்பப்படும். No. 3 கொமாரப்பாளேயத்தில் நடைபெறும் பதினெண்சித்தர் வாரவழிபாட்டு மன்றத்திற்கு ஆசிரியருடன் துணேக்கு சென்று

இணைந்து செயல்படுங்கள். மேலும் அத்தனூர் அம்மன் கோயிலுக்கும் அடிக்கடி சென்று வாருங்கள். அவ்வப்போது குருமார் இரா.வெங்கடேசனிடமும் அருளுரைகளையும், அறிவுரைகளையும், செயல்நிலைகளையும் பெற்று செயல்படுங்கள். தங்கள் குடும்பத்தார் அனைவரையும் குருதேவர் வாழ்த்தியருளுகிறார்.

உடன் பதில்.

**அன்பு**
**குருதேவருக்காக,**
**தலைமைப்பீடம்.**
**21-9-89.**

இந்த அஞ்சலை அவ்வட்டாரத்தார்கள் அனைவருக்கும் படித்துக் காட்டுங்கள். இதற்கு உடனே இரண்டு பேனா நகல்களும், 1 + 2 = 3 x 2 = 6 கார்பன் நகல்களும் தலைமைப்பீடத்திற்கு அனுப்புங்கள்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

# அடியானுக்கு குருதேவரும், கொள்கைகளும், குறிக்கோள்களும்தான் முக்கியம்

தலைமைப்பீடம்,
6-9-1989, இரவு 10:45மணி.

அருள்மிகு மேற்கு மண்டல அ.வி.தி. தலைவர், அருள்மிகு மேற்கு மண்டல நிர்வாகக் குழு துணைத் தலைவர், அருள்மிகு இராசிபுரம் ஐந்தொழில் வல்ல சிவபெருமான் சன்னிதானம் சித்தரடியார் திரு வ.பன்னீர்செல்வம் (ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அச்சகம், 4-B, சேலம் மெயின் ரோடு, இராசிபுரம் - 637408) அவர்களின் அருட்சமூகத்திற்கு

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் ஆணைப்படி தலைமைப்பீடம் விடுக்கும் மடல்:

1) அனைத்தும் குருவின் செயலே! தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்கள் திருவருளே!

2) பேரன்புடையீர்! தங்களின் 5-9-89ஆம் தேதியிட்ட உள்நாட்டஞ்சல் இன்று கிடைத்தது. குருதேவர் படித்து விவரம் அறிந்தார். கவலை வேண்டாம்.

3) குருதேவரே தம் கைப்பட உங்களுக்கு கடிதம் எழுதக் கூடிய தகுதியை மீண்டும் நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய வீட்டிலேயே தங்கி, உங்களோடு உண்டு உறங்கியவர் குருதேவர். தங்களுக்கும், தங்களது துணைவியாருக்கும் தங்கள் வீட்டு மாடியிலேயே **அருளியலாக** எல்லா வகையான அருள்களையும்

வழங்கினுர். நீங்கள் இருவரும் குருதேவர் இட்டும் தொட்டும் அருள் வழங்க வேண்டும் என்று நினைத்தீர்கள். அதற்குரிய பக்குவம் இன்னும் வரவில்லை என்பதால்தான் தொட்டு அருள் வழங்கவில்லை. அவர் எதிர்பார்த்தது போல் உங்கள் துணைவியார் முழுமையாக விலகி நிற்கிருர். நீங்களோ யார் யார் மீதோ குற்றம் குறைகளை கூறிக்கொண்டு இயக்கத்தில் முழுமையாகச் செயல்படாமல் விலகி நிற்கிறீர்கள். தங்களுக்கு குருதேவரும், தாத்தாக்கள் ஆத்தாக்களும், கொள்கைகளும், குறிக்கோள்களும்தான் முக்கியம்.

“நீங்கள் குருதேவருக்குள் இருக்கிறீர்கள்! உங்களுக்குள் குருதேவர் இருக்கிருர்!” உங்களை யார் குறை சொன்னுலும், திட்டினுலும் அதைப் பற்றி கவலையே இல்லை. நீங்கள் முழுக்க துணிவோடும், பணிவோடும், கனிவோடும் மேற்கு மண்டலத்திற்கே தலைவராகச் செயல்படக் கூடியவர்; தமிழகத்தின் தலைவர்களில் ஒருவராகவும், தளபதிகளில் ஒருவராகவும் இருக்க வேண்டியவர்; உங்களுக்கு பகுத்தறிவுப் பாரம்பரியம் உண்டு; தமிழ்ப் பற்று உண்டு, இனப் பற்று உண்டு, நாட்டுப் பற்று உண்டு. இன்றைக்கு நமது குருதேவரை விட்டால்; அவருடைய காலத்தில் செயல்படாமல் விட்டு விட்டோம் என்ருல்; தமிழ்மொழியோ, தமிழினமோ, தமிழ்நாடோ என்றைக்குமே உருப்படாது, அடிமைப்பட்டுத்தான் இருக்கும். இது உங்களுக்குப் புரியாதது இல்லை.

உங்கள் வீட்டு மாடியில்தான் மேற்கு மண்டல நிர்வாகக் குழு அலுவலகம் இருக்கிறது. துணிந்து பலரையும் உருவாக்குங்கள். மேற்கு மண்டலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வாருங்கள். தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தைப் பற்றிப் பேசுங்கள். அ.வி.தி. பணியை மக்களோடு தொடர்பு கொள்வதற்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் வீட்டருகில் உள்ள அருட்கோட்டத்தை மேற்கு மண்டலத்திற்கே தலைமை அருட்கோட்டமாக செயல்படுத்துங்கள்.

இதுவரை அச்சிட்டுள்ள அறிக்கைகளில் உங்களுக்குப் பிடித்தமான வாசகங்களை தேர்ந்தெடுத்து அச்சிடுங்கள்.

தாங்கள் இன்றைய நிலையில் சன்னிதான உடையைக் கூட அணியத் தேவையில்லை. சிவப்பு வேட்டி, சட்டை, பேண்ட், பனியன், துண்டு, ... என போட்டுக் கொண்டால் கூடப் போதும். நம்முடைய இயக்கம் விடுதலை இயக்கம் என்பதால் நீங்கள் எல்லோரையும் போலவே உடை அணிந்து கொள்ளலாம். ஆனால், சிவப்பு சால்வை, அல்லது சிவப்பு பெரிய துண்டை (M.L.A. போன்றவர்கள் போடுபவை) தோளில் போட்டுக் கொண்டால் போதும். ஒரு தோள்பையில் அச்சடித்த அறிக்கையை வைத்துக் கொண்டு, தாங்கள் செல்லும் அனைத்து இடங்களிலும் வழங்குங்கள். உங்கள் ஊர்ச் சந்தையில் மட்டும் கொடுக்க சின்ன நோட்டீசு போட்டு, இன்ன இடத்தில் ‘பேய், பிசாசு பாதிப்புக்களுக்கும், பில்லி சூனியம் பாதிப்புக்களுக்கும், பாதிக்கப் பட்டவர்களுக்கும் மந்திரித்து பதினெண்சித்தர் முறையில் அருள் வழங்கப் படுகின்றது’ என்று சிறிய சிறிய அறிக்கைகள் அச்சிட்டு ஆயிரக் கணக்கில் வாராவாரம் வழங்குகிறீர்கள் என்றாலே போதும்.

உங்கள் பட்டா நிலத்தில் உள்ள அருட்கோட்டத்தை நன்கு அழகுபடுத்துங்கள். யாகசாலையை சிமிண்டிலேயே கட்டி நன்றாக அழகாக வையுங்கள். அருட்கோட்ட மெய்ஞ்ஞானக்கொடி கம்பத்தில் உள்ள கொடியை உங்கள் கையளவில் ஒரு முழ அகலம், 2 முழ நீளம் உள்ள துணியால் ஏற்றப்பட வேண்டும். ஒரு மண்டலத்திற்கு ஒருமுறை அதாவது 48 நாட்களுக்கு ஒருமுறை புதியதாக மாற்ற வேண்டும். மேலும் அருட்கோட்ட பெரிய பெயர்ப் பலகை போட்டு எழுதுங்கள். அன்றாடம் மாலையில் குழந்தைகளுக்கும் மந்திரிக்கப்படும் என்று எழுதி வையுங்கள். உங்களுக்காக மிகுந்த ஆற்றல் உடைய முடிகயிறுகள் ரூ.3க்கும், தாயத்துக்கள் ரூ.5க்கும் கூட ஆயிரக்கணக்கில் அனுப்பத் தயாராக இருக்கின்றார் குருதேவர். நோய்க்கு டாக்டரிடம்

சென்ருலே ரூ.5 செலவழிக்கிருர்கள். ஒரு முடிகயிறுக்கு ரூ.3 செலவழிப்பது பெரிதல்ல. கட்டாயம் செலவழிப்பார்கள்.

நோட்டீசின் மாதிரி இத்துடன் இணைத்து அனுப்புகிரேம். இதே நோட்டீசை சில ஆயிரம் அச்சடித்து வெண்ணந்தூர் சந்தையிலும், சேலம் சந்தையிலும், கடை வீதிகளிலும், நாமக்கல்லிலும், திருச்செங்கோடு கோயிலிலும் துணிந்து கொடுத்து விட்டு வருவீர்கள் என்ருல் போதும். பிறகு சேலம் மாவட்டத்திலேயே உங்களை மிஞ்சுகின்ற தலைவர்களே கிடையாது. குருதேவரை கார் வைத்தே உங்கள் ஊருக்கு அழைத்துச் செல்வீர்கள் நீங்கள். மக்களுக்கு ரூ.3, ரூ.5க்கு மேலே காணிக்கை எதுவும் சொல்ல வேண்டாம். கைக்குழந்தைகளுக்கு மந்திரிப்பது என்ருல் ரூ.1¼ வாங்கிஞல் போதும். இம் மண்ணுலகிலேயே பதினெண்சித்தர்களால்தான், அதாவது தமிழர்களால்தான் அருளை மருந்தாகவும், விருந்தாகவும் முடிகயிறுகளிலும், தாயத்துக்களிலும் தர முடிகிறது.

இவற்றையெல்லாம் நீங்கள் செய்வீர்கள் என்ருல், இன்றைக்கு தனிமனிதர் என்ற நினைப்புக்கே இடம் ஏற்படாது. உங்களுக்கென்றே ஒரு மக்கள் செல்வாக்கு ஏற்பட்டிருக்கும். அதுவும் உங்களுக்கென்று தமிழினத்தின் குருபீடமாகிய பதினெண்சித்தர் பீடாதிபதி குருதேவராகவும், துணைவராகவும் இருக்கிருர். இது யாருக்குமே கிடைக்காத அரிய பெரிய வாய்ப்பு. உங்களுடைய வாழ்க்கையின் கடைசி பகுதியிலாவது இவற்றையெல்லாம் புரிந்து; **யாரைப் பற்றியுமே கவலைப்படாமல் தன்னம்பிக்கையோடும், தலைமைப் பண்போடும் செயல்படுங்கள்.** தந்தை பெரியாரால் சாதிக்க முடியாத தமிழின மொழி மத விடுதலையை நமது குருதேவர் சாதித்திட நீங்கள் பெரும் துணையாக இருப்பீர்கள். உங்களுக்கு வரலாற்றுப் புகழ் கிடைக்கும். உங்களின் வாழ்க்கையின் பயன் கிடைக்கும். உங்களுக்கு தமிழகம் முழுவதும் நண்பர்களும், தோழர்களும் போட்டி போட்டுக் கொண்டு உருவாகிடுவார்கள். உங்களுக்கு இந்த தகுதி உண்டு. இதற்குரிய

திறமையும் உண்டு. இனிமேலாவது புரிந்து செயல்படுங்கள். இந்த அஞ்சல் படித்தவுடனேயே இதன்படி செயல்படுவதாக குருதேவருக்கு மனந்திறந்து வாக்குறுதியை கொடுங்கள்.

4) தங்களுடைய குடும்பத்தார்கள் தங்களோடு வரவில்லை. தங்களைப் புரிந்து கொள்ளவில்லை. தங்களுக்கு ஒத்துழைப்பு தரவில்லை. தங்களுக்கு நண்பர்கள் இல்லை. தொண்டர்கள் இல்லை. தங்களுக்கென்று செல்வாக்கில்லை என்றெல்லாம் இந்த அஞ்சல் கண்டது முதல் கவலைப்பட தேவையில்லை! தேவையில்லை!! தேவையில்லை!!! தேவையேயில்லை! அனைத்து முயற்சிகளுக்கும் நீங்களே தலைவராக, வழிகாட்டியாக, வழித்துணையாக இருந்திடத் தயாராகிடுங்கள். குருதேவர் மனம் திறந்து இந்த அஞ்சலை உங்களுக்கு எழுதச் சொல்லி இருக்கிறார். இதிலுள்ள வாசகம் அனைத்தும் குருதேவர் அவர்கள் விரிவாகக் கூறியவற்றின் சுருக்கம்தான்.

5) குருதேவர் உங்களை மிகுதியாக மதிக்கிறார், போற்றுகின்றார், ஏற்றுக் கொண்டு இருக்கிறார். அதிலும் குறிப்பாக நீங்கள் 1.9.89ஆம் தேதி சிறுமுகையில் நடைபெற்ற மேற்கு மண்டல நிர்வாகக் குழுக் கூட்டத்திற்கு வந்திருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். எனவேதான், இந்த விரிவான சுருக்க விளக்க அஞ்சலை எழுதச் சொன்னார். உங்களின் நலத்தை மிகவும் விசாரித்தார். தங்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கும் தமது வாழ்த்தையும், பாராட்டையும் தெரிவிக்கச் சொன்னார். விரைவில் தங்களுடைய துணைவியாரும், குடும்பத்தவர்களும் குருதேவரையும், இயக்கத்தவர்களையும் புரிந்து கொள்வார்கள். கவலைப்பட வேண்டாம். உடனடியாக இயக்கத்தில் பெருவீரம் காட்டி செயல்படுங்கள். அனைத்தும் வெற்றியாகட்டும்!

**குறிப்பு:-**

திரு சோ.இரவீந்திரனால் உங்களை கண்டிக்க நேரிட்டதிற்கு குருதேவரே வருத்தப்பட்டார். ஆனால், அதைத் தவிர வேறு வழியில்லை. இரவீந்திரன் மேற்குமண்டலத்திற்குள் இருக்கக் கூடாது.

அதுவும் உங்கள் பாதுகாப்பில் குருதேவர் பெயரில் உள்ள அச்சகத்தில் வேலை பார்க்கக் கூடாது என்பது தாத்தாக்கள் ஆத்தாக்கள் விருப்பம், ஆணை. இன்றைய அருளாட்சி நாயகம் தஞ்சைத் தாத்தாதான் இந்த அஞ்சல் முழுமையாக எழுதப் பெற்றதிற்கும் காரணம். எனவே, இந்த அரிய பெரிய வாய்ப்பை நழுவ விட்டு விடாதீர்கள். தவற விட்டு விடாதீர்கள்.

தங்களின் மனம் திறந்த விரிவான பதிலை குருதேவர் எதிர்பார்க்கிறார். உடன் பதில்.

**அன்பு**
**குருதேவருக்காக,**
**தலைமைப்பீட எழுத்தர்.**
**8 - 9 - 89, பகல் 10:53 மணி.**

**<u>பின்குறிப்பு</u>:-**

1) தங்களின் 7.9.89ஆம் தேதியிட்ட உள்நாட்டஞ்சல் கிடைத்தது. குருதேவர் படித்தார். வாழ்த்தினார். கவலை வேண்டாம்.

2) தாங்கள் கூறிய கருத்து விளக்கம் சரியே! நீங்கள் நினைக்கும் ஊகமும் சரி. சிறிது எச்சரிக்கையாக இருங்கள்.

3) தாங்கள் நிருபரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது திரு இராசை கங்காதரக்குமாரும், திரு M.C.இராமனும் மோட்டார் சைக்கிளில் வந்து நின்ற உடன் புறப்பட்டுச் சென்று விட்ட செய்தியைக் கண்டு குருதேவர் மிகவும் வருந்தினார். கவலை வேண்டாம். தலைமைப்பீடம் நாளை வர இருக்கும் கங்காதரக் குமாரிடம் நேரில் பேசுகிறோம்.

உடன் பதில்.

அன்பு
தலைமைப்பீடம்.
8-9-89 பகல் 1:00மணி.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# மெய்யான இந்துமதத்தின் தத்துவம்

தலைமைப்பீடம்,
8-11-1989.

அருள்மிகு மேற்கு மண்டல இ.ம.இ. நிருவாகக் குழு செயலர், அருள்மிகு வேம்படிதாளம் சுடலைக்காரி சன்னிதானம், அருள்மிகு பதினெண்சித்தர் பீடத் தருகுலக் காப்பாளர்களில் ஒருவர், சித்தரடியார் குருமார் திரு இரா.வெங்கடேசன் [M.A, B.L.] (2/68, மெயின் ரோடு, வேம்படிதாளம் - 637504) அவர்களின் மூலம் பதினெண்சித்தர் பீடத் தருகுலத்தில் நடைபெற்ற (28.10.89) தீவாளித் திருநாள் சிறப்புப் பூசையில் கலந்து கொண்ட அனைவருக்கும் தலைவர், குருதேவர், ஞானத்தந்தை, ஞானாச்சாரியார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் விடுத்துக் கொள்ளும் வாழ்த்துத் திருவோலை! பாராட்டு மடல்!

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்களின் திருவருளே!

2) தங்களுடைய அனைத்து அஞ்சல்களும் கிடைத்தன. விவரம் அறிந்தோம். மிக்க மகிழ்ச்சி. பாராட்டு.

3) தீவாளித் திருநாளில் நடைபெற்ற பூசையை தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும் ஏற்று; அப்பூசையில் கலந்து கொண்ட அனைவருக்கும் தமது வாழ்த்தையும், ஆசியையும் வழங்கினார்கள். தஞ்சைத் தாத்தாவும், தாத்தா பாலசுப்பிரமணியம் அவர்களும், தாத்தா பாண்டி முனீசுவரர், ஆத்தாள் சமயபுரத்து மாரியம்மன், தில்லைக் காளி, காத்தாயி அம்மன், சேலம் கோட்டை

மாரியம்மன் போன்ற எண்ணற்றோர் வந்து கலந்து கொண்டனர். அன்றைய தினத்தில் தருகுலத்தில் கண்ட காட்சிகள் உண்மையானதே! கவலை வேண்டாம். 31ஆம் தேதி நடைபெற்ற மூன்றும் பிறை பருவப் பூசையும் மாபெரும் வெற்றியே! இந்த பெருமையும், சிறப்பும் இப்பூசையில் கலந்து கொண்ட அனைவரையும் சாரும். மேலும் இப்பூசையின் மூலம் அனைவரும் நன்கு அருளுலகத்தில் அறிமுகம் ஆகியிருப்பதால் தலைமைப்பீடத்துடன் வாரம் ஒருமுறையாவது தொடர்பு கொண்டு முழுப் பாதுகாப்பையும் பெற்று வர வேண்டும். புரிந்தும், புரியவைத்தும் செயல்படவும்.

4) இனிமேல் தஞ்சைத் தாத்தாவின் புதிய அருளாணையின்படி மாதம் ஒருமுறை பௌர்ணமி அன்று **சுடலைப்பூசையை** பலி கொடுத்துச் செய்தால் போதும். அதேபோல் வாராவாரம் அவ்வட்டாரத்தில் உள்ள சிவன் கோயில் அல்லது ஏதாவது ஒரு அம்மன் கோயிலில் நம்மவர்கள் சன்னிதான உடையில் கலந்து கொண்டு கூட்டு வழிபாடு செய்து கோயிலின் வாயிற்படியில் நின்று வருகிற மக்களுக்கு மந்திரித்தால் போதும். அனைத்தும் வெற்றியாகும். புரிந்து செயல்படுங்கள். நம்மவர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்திடுக!

5) ஒரு நாட்டின் கடவுளையோ, ஒரு மொழிக்குரிய கடவுளையோ, ஓர் இனத்தின் கடவுளையோ; மற்ற நாட்டினரோ, மற்ற மொழியினரோ, மற்ற இனத்தினரோ வழிபட்டுப் பயனே இருக்காது. ஏனென்றால் ஏறத்தாழத் தமிழ்மொழியின் ஒலி அலைகளைக் கொண்டு உலக மொழிகள் அனைத்தையும் பேசமுடியும் என்பது போல்; வேறெந்த மொழியையும் கொண்டு தமிழ்மொழியைப் பேச முடியாது. எல்லா மொழிகளுக்குமே மனிதர்களை அருளுலகில் உள்ள நாற்பத்தெட்டு வகையான சித்திநிலைகளைப் படிப்படியாகப் பெற்றுக் காலப்போக்கில் கடவுளாக ஆக்கிடும் வல்லமை உண்டு. ஆனால் அந்த வல்லமையின் அளவு தமிழ்மொழியினால் கிடைக்கும் அளவிற்கு இருக்காது.

இருந்தாலும் உலகெங்கும் உள்ள எல்லா மொழியினர்களுமே அந்தந்த மொழிகளுக்கு உரிய கடவுளர்களாக ஆகியிருக்கிறார்கள். எனவேதான், அவரவர் தத்தம் மொழியில் தொன்று தொட்டு வழிபட்டு வந்த கடவுள்களையே வழிபட்டு வந்தால்தான் பயனடைய முடியும் என்று தெளிவாகப் பதினெண்சித்தர்களுடைய இந்துமதம் கூறுகிறது.

6) மனிதர்கள் பொதுவாகக் கடவுளை அவரவர் மொழியில் அழைத்துப் பூசை செய்தாலும், அந்தந்த மொழிக்குரிய கடவுள்கள்தான் அவரவர்க்கு உதவி செய்வார்கள். அதுதான் கடவுளர் உலகில் உள்ள மிகப்பெரிய நுட்பமான பயனுள்ள பேருண்மையாகும், தத்துவமாகும். அதனை அநுபவப் பூர்வமாக ஞானாச்சாரியார் என்ற நிலையில் உள்ளவர்கள்தான் தங்கள் தங்கள் காலங்களில் மிகத் தெளிவாக வெளியிடுகிறார்கள். இந்தப் பேருண்மை உலகம் முழுதும் தெரியும் என்றால்; இப்பொழுது தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற புத்த மதம், சமண மதம், பிறமண்ணினரான பிராமணர் எனும் வடஆரியரின் வேத மதம், பதினெண்சித்தர்களுடைய இந்து மதம், ... இவைகளுக்கு இடையில் கடுமையான போட்டா போட்டியோ, போரோ உருவாகாது. அதாவது, யாரும் எந்த மதத்தையும் அழிக்க விரும்ப மாட்டார்கள்; வற்புறுத்திப் பரப்பிடவும் விரும்ப மாட்டார்கள். அதே நேரத்தில் உலகெங்கும் தோன்றிடும் கடவுள்கள், தேவர்கள், தேவகுமாரர்கள், தேவதூதர்கள், சித்தியாளர்கள், தவசிகள், ஞானிகள், ... முதலியவர்கள் மனித வாழ்விற்குத் தேவையென கண்டறிந்த பேருண்மைகள் உலகெங்கும் அன்பு முறையில், அமைதி வழியில் எடுத்துக் கூறிப் பரப்பப்படும். அது உலகின் மனித இனங்களின் விடுதலை, மொழிகளின் விடுதலை, நாடுகளின் விடுதலை, உலக அமைதி, நட்பு, சமாதானம், குடும்பப் பாசம், தோழமை முதலிய அனைத்தையும் வளர்த்திடும் என்பதுதான் பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்தின் தத்துவம்.

7) அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டுத் தங்கள் மண்டலம் முழுவதும் ஆங்காங்கே அருட்கோட்டங்களும், பதினெண்சித்தர் சிவசத்தி வார வழிபாட்டு மன்றத்தையும் அமைக்க முயலுங்கள். மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றி செயல்படுங்கள். அவரவர்கள் தங்களால் இயன்றளவு 35np, 50np, 60np அஞ்சல் தலைகளை தலைமைப்பீடத்திற்கு அனுப்பி உதவுங்கள். தங்கள் அனைவருக்கும் அனைத்து நலன்களும் வளங்களும் கிடைத்திட குருதேவர் வாழ்த்துகின்றார்.

உடன் பதில்.

**அன்பு**
**தலைமைப்பீடம்,**
**8-11-89.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# தமிழருடைய சித்தர்நெறியைப் பரப்பிட உதவுபவர்கள் தேவை!

தலைமைப்பீடம்,

30-11-89, காலை 7:30மணி.

அருள்மிகு மேற்கு மண்டல நிர்வாகக் குழு கொள்கை பரப்புச் செயலாளர் அருள்மிகு மேட்டூர் முனீசுவரர் சன்னிதானம், அருள்மிகு தேவி வீரமாகாளி அருட்கோட்டக் காப்பாளர் சித்தரடியார் திரு அரங்கநாதன் (ஆசிரியர், No.3 கொமாரபாளையம், மல்லூர் வழி, சேலம் - 636203) அவர்களின் அருட்சமூகத்திற்கு,

தலைவர், குருதேவர், ஞானத்தந்தை, ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் விடுக்கும் செயல்நலம் பாராட்டுத் திருவோலை:

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்களின் திருவருளே!

2) தங்களின் 27 & 28-11-89ஆம் தேதியிட்ட அஞ்சலும், ஆங்கில புத்தகத்திற்கு நிதியாக கொடுத்த ரூ.100உம், ரூ.7.00 மதிப்புள்ள 35np அஞ்சல்தலைகள் இருபதும் நேற்றுக் காலையில் கிடைத்தன. மிக்க மகிழ்ச்சி. வாழ்த்து, பாராட்டு, நன்றி!

3) தாங்கள் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி பூசையை பௌர்ணமியின் முன் மூன்று நாட்கள், பின் மூன்று நாட்கள் என இருக்கும் ஏழு நாட்களில் என்றைக்கு வேண்டுமானாலும் பருவபூசையை நடத்தலாம். அது உங்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. ஏனென்றால், மேற்கு மண்டலத்தில் உள்ள மற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் கருத்தில் கொண்டு எல்லோரும் நமது தேவி வீரமாகாளி அருட்கோட்டத்திற்கு

வர வசதியாக இருக்கும்படிப் பருவபூசையை மாற்றிக் கொள்ளுங்கள். தாங்கள், தங்கள் துணைவியார், தங்களின் மகள், மருமகன், பேரக் குழந்தையும் நலமுடன் இருக்க வாழ்த்துகிறோம்.

4) 'இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்' என்ற அறிக்கையை மேற்கு மண்டலத்தாரை ஒன்றுதிரட்டியாவது சில ஆயிரங்கள் அச்சிடுங்கள். தேவையானால் விளம்பரங்கள் தருபவர்களிடம் பணம் வாங்கி அதன்மூலம் அச்சடிக்கலாம். அல்லது மேற்கு மண்டலத்தார் அனைவரும் பங்கு பெறுமாறு அச்சடியுங்கள். பலரிடம் நன்கொடை பெற்றும் அச்சடிக்கலாம்.

5) இங்கு சி.கவிக்குமாருக்கும், சுந்தரானந்தன் அவருக்கும் உடல்நிலை சரியில்லை. அதனால் ஒரு வாரம் கழித்துத்தான் ரிக்கார்டு செய்ய முடியும். உங்களுடைய கேசட் 2உம் பத்திரமாக உள்ளது. கவலைப்பட வேண்டாம். தாங்கள் இங்கு வரும்போது பெற்றுக் கொள்ளலாம்.

6) தங்களுடைய அருட்கோட்டப் பூசையில் கலந்து கொள்பவர் அனைவருக்கும் பயன் உண்டு. ஏனென்றால், தங்களுடைய பூசைகள் அனைத்தும் முழு வெற்றி பெற்று வருகின்றன. எனவே, விண்ணவர்களும் வந்து கலந்து கொள்ளக் கூடிய உங்களது பூசைகளில் எல்லாம் குறைந்தது அரை மணி நேரமாவது இ.ம.இ. கொள்கை விளக்கம் ஆரம்பத்தில் படித்துக் காட்டிய பிறகு பூசை செய்ய ஆரம்பியுங்கள். இப்படி தொடர்ச்சியாகப் படித்தால் ஒரு வாரத்திற்குள் முடித்து விடலாம். இதேபோல், பூசாமொழியில் உள்ள முன்னுரையையும் அடிக்கடி படித்துக் காட்டுங்கள். காலப்போக்கில் இந்த இரண்டு நூல்களிலும் உள்ள கருத்துக்கள் உங்கள் மனதில் பதிந்து விட வேண்டும். அப்பொழுதுதான் உங்கள் பேச்சும், மூச்சும், செய்கையும் முழுமையாக சித்தர் நெறியைப் பரப்புவதற்கு பயன்படும். மற்ற மதத்தவர்களுக்கு பைபிள், குரான், ... இருப்பது

போல் நமக்கு குருபாரம்பரியம் இருக்கிறது. அவற்றையெல்லாம் அச்சிட எம்மிடம் போதிய வசதியில்லை.

<u>**குறிப்பு:-**</u> மற்ற மதத்தில் உள்ளவர்கள் தங்களுடைய மத நூல்களை அச்சிடவும், மதக் கருத்துக்களைப் பரப்பவும் முயலுகின்றவர்களுக்கு எல்லாம் ஏராளமான பொருளுதவிகளை தாராளமாக வழங்குகிறார்கள். ஆனால், <u>இந்துமதமான தமிழருடைய சித்தர் நெறியைப் பரப்புவதற்கு மட்டும் உதவுகின்றவர்கள் ஏறத்தாழ எவருமே இல்லை</u>. ஏனென்றால், நம்மவர்கள் கோயில் உண்டியலில் பணத்தைக் கொட்டுவதிலும், கோயில்களில் பெரிய பெரிய பூசைகளையும், விழாக்களையும் ஆடம்பரமாகச் செய்வதிலும் மட்டுமே இந்துமதம் வளர்ந்து விடும் என்று நம்புகின்றார்கள். **இன்றைய நிலையில் ஏறத்தாழ இந்துமதத்தின் வரலாற்றையோ, விளக்கத்தையோ முறையாகவும், நிறைவாகவும் தெரிந்தவர்கள் நமது இயக்கத்தவர்களைத் தவிர வேறு யாருமில்லை**. இப் பேருண்மைகளைப் புரிந்து கொள்ளுங்கள்.

நமது தமிழின மொழி மத விடுதலை புத்தகம், கொள்கை விளக்கப் புத்தகம், இந்துமத விளக்கப் புத்தகம், அருட்பணி விரிவாக்கத் திட்ட விளக்கப் புத்தகம், ... முதலியவைகளின் கருத்துக்களை எல்லோருக்கும் கூறுங்கள். தாங்கள் ஆசிரியர் என்பதால் கருத்து விளக்கம் கூறுங்கள். <u>கொள்கைகள்தான் மதத்தை வளர்க்கும். வெறும் சடங்குகளால் மதத்தை வளர்க்க முடியாது.</u> பொதுவாக இந்துமதப் பத்தர்கள் கோயில்களில் பெரிய பெரிய விழாக்களை செய்வதுதான் புண்ணியம் என நினைக்கின்றார்கள். ஆனால், அந்த கோயில்களின் அடிப்படையும், உயிர்நாடியும், செயல்நிலையும் பதினெண்சித்தர்களுடைய நூல்களில்தான் இருக்கின்றன.

எனவே, பதினெண்சித்தர்களுடைய நூல்களை அச்சிட்டு வெளிக் கொணருவதிலும்; அந்த நூல்களில் உள்ள கருத்துக்களை தங்களைப் போன்றோர் எல்லா இடங்களிலும் எடுத்துக் கூறி விளக்கம்

கூறுவதிலும்தான் இந்துமதத்தின் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் இருக்கின்றது. இன்னும் சொல்லப் போனுல், அறியாமையாலும், மூடநம்பிக்கையாலும், கண்மூடித்தனமான சடங்குகளாலும்தான் நமது இந்துமதம் தூசு தும்பட்டைகள் மிகுந்து மாசு அடைந்து கிடக்கும் பெரிய மாளிகை போல ஆயிற்று. எனவே, அந்த மாளிகையை சுத்தம் செய்யவும், புதுப்பிக்கவும் சித்தர் நெறியால்தான் முடியும். எனவே, இவற்றை நம்மவர்கள் உணர்ந்தும், பிறருக்கு உணர்த்தியும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டேயாக வேண்டும்.

இதற்காகத்தான் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் காலங்கள் தோறும் தங்களால் முடிந்தவரை ஆயிரமாயிரம் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களேயும் உருவாக்கி அருட்பணி விரிவாக்கத் திட்டத்தை வழங்கி செயல்படச் செய்கிருர்கள். இருந்தும் இந்த உலகத்திலேயே தோன்றிய முதல் மதம், மூத்த மதம், தத்துவங்கள் மிகுந்த மதம், செயல்சித்தாந்தங்கள் அளவற்று உள்ள மதம் என்ற தகுதிக்குரிய ‘சித்தர் நெறி’யான ‘சீவநெறி’யான ‘மெய்யான இந்துமதம்’ தழைக்க உழைக்க அனேவருக்கும் அழைப்பு விடுங்கள்.

யார் வந்தாலும் வராவிட்டாலும் நம்மவர்களில் ஒரு சிலராவது அளப்பரிய தன்னம்பிக்கையோடும், மொழிப் பற்ருேடும், இனப் பற்ருேடும், நாட்டுப் பற்ருேடும் மதப் பற்றை வளர்த்துக் கொண்டு செயல்பட்டேயாக வேண்டும். அப்பொழுதுதான் நமது வருங்காலம் ஒளி மிக்கதாக, வளம் மிக்கதாக ஆகி விடும்.

இவற்றையெல்லாம் மேற்கு மண்டலம் முழுவதும் தங்களுடைய நகல் எடுக்கும் பணியால் பரப்பிடுக. கூடுமானவரை பேளு நகல் நான்கைந்தாவது எடுத்து தலேமைப்பீடத்துக்கு அனுப்புங்கள். பொறுமையாக பொறுப்பாக நிதானமாக எடுத்து ஒன்றன்பின் ஒன்ருக அனுப்பிக் கொண்டே இருங்கள். வேம்படிதாளம் இரா. வெங்கடேசன்

மூலம் நகல் எடுத்து பெங்களூருக்கும், மதுரைக்கும் அந்த நகலை அனுப்பி அவர்களை Cyclostyle செய்து தலைமைப்பீடத்துக்கு அனுப்பக் கூறுங்கள். மேற்கு மண்டலம் முழுவதும் நீங்கள் முதலில் படித்துக் காட்டுங்கள். பிறகு, நகல் தாருங்கள்.

7) No.3 கொமாரபாளையத்தில் ஆசிரியர் அ. அரங்கநாதன் என்ற சித்தரடியாரால் அருட்போருக்குரிய ஆத்தாள் தேவி வீரமாகாளியின் போர்க்கோல போர்க்கால செயல்நிலைகள் வளர்ச்சியுற்றன என்ற பெருமைக்குரியவராகுங்கள். தன்னம்பிக்கையும், தன்னலமற்ற போக்குகளும்தான் தங்களை வளர்க்கும். தாங்கள் தங்கள் குடும்பத்தோடு இப்பிறப்பிலேயே முத்தி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறோம். அனைவரையும் அநுபவப் பூர்வமாக சித்தர்நெறியை உணரச் செய்யுங்கள். வெற்றி பெறுக! வளர்ச்சி பெறுக! வாழ்க! அடிக்கடி அஞ்சல் எழுதுங்கள். மேற்கு மண்டலத்தார் அனைவரையும் நலம் விசாரித்ததாகக் கூறுங்கள். அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு இந்துமதம் வளர்ச்சி பெற்று அனைத்து மக்களும் அதன் பயனைத் துய்க்கும் அளவிற்கு பாடுபடுங்கள். அனைத்தும் வெற்றியாகட்டும்.

**அன்பு**

(ஒப்பம்) **குருதேவர், குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,**

13, குமாரசாமி முதலித் தெரு, வரதராசபுரம்,

அம்பத்தூர், சென்னை-53.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# காலக்கணக்கீட்டு அடிப்படையில் கடவுள்களை விளக்கிடும் முதல் அருளாளரே குருதேவர்!

தலைமைப்பீடம்,
16-12-1989.

அருள்மிகு அம்பகரத்தூர் பத்திரகாளியம்மன் சன்னிதானம் திரு A.P.திருஞானம் அவர்களுக்கு உன் ஞானத்தந்தை விடுக்கும் அவசர அவசிய மடல். (இதன் நகல் நாடெங்கும் அனுப்பப்பட்டேயாக வேண்டும்.)

(1) தாங்கள் பெரும்புலியூர்ப் புலவர் பற்றிக் கூறியிருப்பதை ஏற்கிறோம். அவர் பிறவியிலேயே ஞானசித்தர் என்று வாழ்த்தப்பட்டுள்ளார். எனவே, அவருக்கு வாழ்க்கையில் சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். இராமலிங்க அடிகளார் அவர்களுக்கே “பட்டது போதும்! பட்டது போதும்!” என்று வருத்தப்பட்டுக் கூறும் அளவிற்குச் சோதனைகள் இருந்தன என்பதை நினைவு கூர்ந்திடச் சொல்லுங்கள். மேலும், புலவரின் துணைவியாரும், மகளும் திருவருட்செல்விகளாகவே இருக்கின்றனர். எனவே, அவருக்கு இப்பிறப்பிலேயே எல்லா முழுமைகளும் கிடைக்கும். இனியும் அவருக்கு எல்லாப் பாதுகாப்புக்களும் தரப்படும்.

(2) சமயக்குரவர் நால்வரில் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும்தான் அதிகமான அளவில் தமிழ்நாடெங்கும் சுற்றி வந்து இந்துமத எழுச்சிக்காகப் பாடல்கள் பாடினர்கள். இந்த இருவரின் அருளணுக்களையும் மிகுதியாகப் பெற்று ஒரு மகானாக திருவவதாரம் செய்திருப்பவரே பெரும்புலியூர்க்

கலியமூர்த்தி. எனவே, மிக விரைவில் அவர் அனைத்து வகையான கவலைகளையும் மறந்து குறைந்தது சோழமண்டலம் (திருச்சி, தஞ்சை) முழுவதும் கிராமம் கிராமமாகவும், ஊர் ஊராகவும் சுற்றுப்பயணம் செய்து கோயில்களிலும், சாலையோரங்களில் உள்ள பசுமையான மரங்களிலும் மெய்ஞ்ஞானக் கொடிகளைப் பறக்க விட்டு அருளாட்சி அமைக்கும் பணியைப் புயல் வேகத்தில் செயலாக்கிடுவார். அவருடைய வீட்டிலுள்ள பெண்களும் காரைக்காலம்மையார், ஔவையார், திலகவதியார் போன்ற சைவ சமய வாரிசுகளாகத் தோன்றியிருக்கிறார்கள். எனவே, விரைவில் தஞ்சை மாவட்டம் முழுவதிலும் அ.வி.தி. கிளைகள் அமைத்து கொடிகள் ஏற்றி மாவட்டச் செயலாளராகச் செயல்பட்டால் அவரின் எல்லாவிதமான பொருளுலகச் சிக்கல்களும் தீர்ந்திடும்.

(3) தஞ்சைப் பெரிய கோயிலின் முன்னால் இந்த அஞ்சல் கண்டவுடன் ஒரு கடையை வாடகைக்கு எடுத்து அங்கு நமது மடத்தின் புத்தகங்களையும், தைலம் பல்பொடி வளம் போன்றவற்றையும் விற்க ஆரம்பித்தாலேயே போதும். அவர், தாங்கள், பழனியாண்டி மூவரின் பொருளாதாரச் சிக்கல்களும் தீர்ந்திடும். இந்த விவரங்களை அவருக்கு மிகத் தெளிவாக விளக்கிக் கூறி அவரை உடனடியாகச் செயலுக்குக் கொண்டு வரச் சொல்லுங்கள்.

(4) தங்களுடைய அஞ்சலில் வீரசிங்கம் பேட்டை மாரியம்மனை சித்தி செய்ய இருப்பதாகக் கூறியுள்ளீர்கள். பீடாதிபதியாகிய குருதேவரே தாங்களறிய இன்னும் அக்கோயிலுக்குச் செல்லவில்லை. ஏனென்றால், வெள்ளைக்காரரின் ஆட்சிக் காலத்தில் மிகப் பெரிய கலகம் பலி கொடுப்பது பற்றி நிகழ்ந்து கணக்கற்றோர் பலியாகி உள்ளார்கள். எனவே, அக்கோயிலை நெருங்குவது பற்றி மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தங்களுக்கு விருப்பம் மிகுதியாக இருப்பது போல் குருதேவருக்கும் விருப்பம் மிகுதியாக உள்ளது. குருதேவர்

தஞ்சை வரும்போது அது பற்றிச் சிந்திப்போம். தாங்கள் விரைவில் சித்தி பெற வேண்டுமென்றால்; தஞ்சையிலுள்ள தாத்தா, பெரியநாயகியம்மன், வராகிப் பாட்டி, ஆத்தாள் தேவி உச்சயினிக் காளி, ஆத்தாள் தேவி கருப்பழகி, ஆத்தாள் தேவி புன்னைநல்லூர் மாரியம்மன், திருவையாறில் உள்ள ஐயாறப்பர், அருளாட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் ஆத்தாள் தேவி சமயபுரம் மாரியம்மன், தாத்தா திருவரங்கத்து மொட்டைக் கோபுரத்து முனீசுவரர், .... என்று எண்ணற்றோர் இருக்கிறார்கள். இவர்களை ஏற்கனவே தங்களுக்குத் தெரியும். இவர்களில் யாரையேனும் தேர்ந்தெடுத்துச் சித்தி செய்து கொள்ளுங்கள். அதுவே நல்லது.

(5) அன்புத் தம்பீ! <u>அருளுலகைப் பொறுத்தவரை இம்மண்ணுலகிலேயே முதன்முதலாக விஞ்ஞானப் பூர்வமாகவும், பகுத்தறிவுப் பூர்வமாகவும் ஆராய்ச்சிகளைச் செய்து வரலாற்று அடிப்படையில், அதிலும் தெளிவாகக் காலக் கணக்கீட்டு அடிப்படையில் கடவுள்களை விளக்கிடும் முதல் அருளாளர் யாம்தான்.</u> இது பெருமைக்காகக் கூறப்படுவதில்லை. இதுதான் உண்மை.

இன்னும் சொல்லப் போனால், இம்மண்ணுலகில் தோன்ற வேண்டிய 48 பதினெண்சித்தர் பீடாதிபதிகளில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகவும், இராசிவட்ட நிறைவுடையாராகவும் தோன்றியுள்ள யாம்தான், இதுவரை தோன்றிட்ட பதினோரு பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் மறைவாக (இரகசியமாக) காத்து வந்திட்ட வரலாறுகளையும், தத்துவங்களையும், செயல்சித்தாந்தங்களையும், அருளூறு பூசாமொழிகளையும், பூசாவிதிகளையும், பிறவற்றையும்; மொழி இனம் சாதி மதம் நாடு என்ற வேறுபாடுகளைப் பார்க்காமல் அனைவருக்குமே அறிவிப்பதோடு, பயிற்சிகளையும் வழங்கி வருகின்றோம். இவ்வரிய பெரிய பணிக்காக எல்லாவகைச் சித்தர்களின் இலக்கியங்களையும், பூசாமொழிகளையும், பூசாவிதிகளையும் எவரெவர்க்கு எந்தெந்த அளவு

தேவையோ அந்தந்த அளவு வழங்கி அருளுலகில் இருந்துவரும் இருளின் பெரும்பகுதியை அகற்றி இருக்கின்றோம்.

அதாவது, எவராக இருந்தாலும் சரி, குருதேவரை முழுமையாக நம்பி வருவோர் குருதேவரால் இட்டும் தொட்டும் சுட்டியும் வாழ்த்தப் பெற்று; அவரவர்க்குரிய சன்னிதானங்களையும், பத்தி முறைகளையும் வழங்கி; இன்றைக்கு இந்தியா முழுதும் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் அருளை அநுபவப் பொருளாக வழங்குபவரைக் கணக்கற்று உருவாக்கி உள்ளோம். சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கணக்கற்றோர் தங்களுடைய பழம்பிறப்புகளை உணர்ந்து; அதன்மூலம் உரிய பயிற்சிகளைப் பெற்று ஞானக்காட்சி, அருள்வாக்கு, அருட்கணிப்பு, அனைத்து வகையான நாள் கோள் மீன் பாதிப்புகளுக்குப் பரிகாரம், மந்திறவாதிகளின் அனைத்து வகையான தீய செயல்களுக்குப் பரிகாரம், ... என்று செயல்படக்கூடிய பல்வேறு வகையான அருளாளர்களை உருவாக்கியிருக்கிறோம்.

இவற்றின் மூலம்தான், இந்துமதத்தின் அருமை பெருமைகளையும், அரிய பயன்களையும், **இந்துமதம்தான் இம்மண்ணுலகின் மூத்த முதல் மதம்** என்ற பெருமையையும்; இம்மண்ணுலகைப் பொறுத்தவரை **தமிழர்கள்தான் அனைத்து வகை மதங்களுக்கும் மூலவர்களாகவும் காவலர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்** என்பதையும், **பதினெண்சித்தர்களுடைய இந்துமதம்தான் அண்டபேரண்டங்களில் எல்லாம் பரவியிருக்கின்றது** என்பதையும், **அமுதத் தெய்வீகத் தமிழ்மொழிதான் அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழி** என்பதையும், **தமிழ்மொழிதான் மனிதரைக் கடவுளாக்குகிற வல்லமை பெற்றது** என்பதையும், இந்தத் **தமிழ்மொழியால்தான் அண்டபேரண்டங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்** என்பதையும், இந்தத் **தமிழர்களுக்குத்தான் குருபீடமாக, நான்கு யுகங்களாக, ஞானாச்சாரியார்கள் எனப்படும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தொடர்ந்து**

**தோன்றி வருகிறார்கள்** என்பதையும், இந்த **ஞானாச்சாரியார்களில் 48வது ஞானாச்சாரியார் தோன்றிய பிறகுதான் இவ்வுலகின் அழிவு பற்றி முடிவு செய்யப்படும்** என்பதையும், **அதற்குரிய காலம் இன்றிலிருந்து 4,27,000 ஆண்டுகள் (சுமாராக) இருக்கின்றன, அதுவரையில் உலகம் உறுதியாக இருக்கும்** என்பதையும், .... இம்மண்ணுலகில் மிகத் தெளிவாகவும், எளிமையாகவும், இனிய எழில்மிகு தமிழ்நடை உடையதாகவும் இருக்கின்ற அறிக்கைகள், அறிவிக்கைகள், சிறிய பெரிய நூல்கள் முதலியவற்றைக் கணக்கற்று அச்சிட்டு வழங்கியும்; அடிக்கடி தமிழகம் முழுதும் சுற்றுப்பயணங்கள் செய்து, தமிழிலும் ஆங்கிலத்திலும் சொற்பொழிவுகள் செய்து; யாம் உருவாக்கிய சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் முதலியவர்களையும் அவரவரின் அருளாற்றலுக்கும், வசதிவாய்ப்பிற்கும் ஏற்ப புதியபுதிய அருட்கோட்டங்கள் அமைத்தோ அல்லது நாடுமுழுதும் உள்ள கோயில்களைப் பயன்படுத்தியோ அருளெனும் அமுதத்தை வாரிவாரி வழங்கி எல்லா மக்களுக்குமே நன்மைகளைச் செய்யும் செயல்நிலைகளையும் உருவாக்கியிருக்கிறோம்.

இருந்தும் நம் மக்கள் விழிச்சி அடையவில்லை, எழிச்சி பெறவில்லை, செழிச்சி வரவில்லை, அருளாட்சிக்காக உழைக்க முன்வரவில்லை. இதைச் சற்றுக் கடுமையாக விமரிசிக்க வேண்டுமென்றால்; அருளுலக மூலவர்களாகவும், காவலர்களாகவும் தோற்றுவிக்கப்பட்ட தமிழர்கள் தங்கள் மொழிக்கும், இனத்துக்கும், மதத்துக்கும் தலைவராக, ஆச்சாறியாராக, குருபீடமாக ஞானாச்சாரியார்கள் தொடர்ந்து தோன்றிக் கொண்டிருந்தும்; தன்னுணர்வோ, தன்னம்பிக்கையோ, இனவுணர்வோ, மொழியுணர்வோ, நெஞ்சு உறுதியோ, சிந்தைத் தெளிவோ போதுமான அளவு இன்னும் பெற்றிடவில்லை, இன்னும் பெற்றிடவில்லை, இன்னும் பெற்றிடவில்லை.

அதுவும் தங்களைப் போல் கணிசமான அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரர்களை உருவாக்கி தமிழகம் முழுவதும் நெடுங்காலமாகச் செயல்படச் செய்தும் தமிழர்கள் தங்களுடைய ஞானாசாரியாரைத் தெரிந்து கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ, வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளவோ, வழித்துணையாக ஒப்புக் கொள்ளவோ, ...... முன்வராத இரங்கத் தக்க நிலைதானிருக்கிறது. இதை உணர்ந்தாவது தங்களைப் போன்றவர்கள் எமது கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் மிகப் பெரிய அளவில் விரிந்து செயலாக்க வேண்டும். அதிகமான அளவு சுற்றுப்பயணங்கள் செய்ய வேண்டும். ஆங்காங்கே கூட்டு வழிபாடுகள் நிகழ ஏற்பாடு செய்ய வேண்டும். விரைவில் இ.ம.இ. மாநில மாநாடு தஞ்சையில் கூட்ட ஏற்பாடு செய்க.

குறிப்பு: இதற்கு 2 பேனா நகல்கள் - தமிழக மையங்களுக்கு நகல் அனுப்புக. - **குருவாணை**. 16-12-89.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் சுந்தரராமன் கையெழுத்தில் இருந்திட்டது.//**

# <u>குருதேவர் எழுதிய அஞ்சல்களிலிருந்து எடுக்கப்பட்ட சில வாசகங்கள்</u>

“இன்றுள்ள பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம்; உங்களுடைய குருதேவர், நம்பினவர்களுக்கும் சரி, நம்பாதவர்களுக்கும் சரி, பக்குவம் உள்ளவர்களுக்கும் சரி, பக்குவம் இல்லாதவர்களுக்கும் சரி, குருதேவரை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் சரி, குருதேவரை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும் சரி, ஒரே மாதிரியாகத்தான் அருளையும், அருளுலகப் பாதுகாப்புக்களையும், எல்லாவித நன்மைகளையும் வாரிவாரி வழங்குவார். அதனால்தான், அருளுலகத்தாராலேயே **‘அருட்கொடை வள்ளல்’** என்று பாராட்டப்பட்டு வருகின்றார்.”

**//29-08-1989இல் நெல்லையைச் சேர்ந்த அடியானுக்கு எழுதியது//**

---

“அன்பு மகளே! .. .. .. உன்னிடம் கொடுக்கப்பட்டுள்ள இயக்கத் தொடர்பான அச்சிட்ட புத்தகங்களைப் பலமுறை திரும்பத் திரும்பப் படித்திடு! குறிப்பாக இ.ம.இ. கொள்கை விளக்கம், தமிழினத் தாழ்ச்சிநிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்? தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தின் கொள்கை விளக்க நூல், பூசாமொழியின் முன்னுரை, ... முதலியவற்றைக் கட்டாயமாக நூற்றுக்கணக்கான முறை திரும்பத் திரும்பப் படித்திடு! அப்பொழுதுதான் <u>**உன் சேவை நாட்டுக்குத் தேவை! நமது மொழிக்குத் தேவை! நமது இனத்துக்குத் தேவை! நமது மதத்துக்குத் தேவை! .... தேவை! தேவை! தேவை! என்ற பேருண்மை உனக்கு விளங்கிடும்! விளங்கிடும்! விளங்கிடும்**</u>!”

**//30-08-1989இல் விரகாலூர் சித்தரடியாளுக்கு எழுதியது.//**

# குருபாரம்பரியம்

**“முடிவெடுக்கத் தெரிந்தவனுக்குத்தான் வாழ்க்கையில் விடிவுண்டு.”**

**“வாழ்க்கையில் விடிவைப் பெற்றவன்தான் பிறருக்கு விடிவை அளிக்க வல்லவனுவான்.”**

***- ஆதிசிவனுர் குருபாரம்பரியம்***

**//05-08-1989 அன்று குருதேவர் அருளியது.//**

---

“குருதேவர் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்காமல் அக இருளேயும், புற இருளேயும் அகற்ற இயலாது. இதை குருபாரம்பரியத்தில்,

**‘நெல்லே உரலில் போட்டு உலக்கையில் குத்திஞல்தான் உமி அகலும். அதைப்போல், நோயாளிகளும், பேயாளிகளும் குருதேவரின் திருவடிக்கு வந்து குருதேவரால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருளப்பட்டால்தான் அருளுலகப் பொருளுலக மாயைகளும், துன்பங்களும் அகற்றப்பட்டு பேரின்பப் பெருநிலேகளேப் பெற முடியும். புற இருளேயும், அக இருளேயும் அகற்றிக் கொள்ள முடியும்.’** என்று பதினெண்சித்தர் பீடாதிபதிகள் ‘***குருபாரம்பரிய வாசகம்***’ ஆகக் கூறுகிறுர்கள்.”

**//17-08-1989இல் வெண்ணந்தூர் சித்தரடியானுக்கு அருளியது.//**

# <u>இந்து வேதம்</u>

இந்து வேதம் ஒன்றுதான், "இந்த மண்ணுலகில், தோன்றக் கூடிய (அ) தோற்றுவிக்கப்படக் கூடிய எந்த ஒரு வேதமானாலும் சரி (அ) எந்த ஒரு வேத மதமானாலும் சரி, அவை இந்துவேதம் எனும் ஆலமரத்தின், (அ) இந்து வேத மதம் எனும் ஆலமரத்தின் இலையாகவோ! பூவாகவோ! காயாகவோ! கனியாகவோ! கொப்பாகவோ! கிளையாகவோ! விழுதாகவோதான் இருக்க முடியும்! இருக்க முடியும்!! இருக்க முடியும்!!!" என்று அழுத்தந் திருத்தமாக, ஆணித்தரமாக, அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறது! உறுதியாகக் கூறுகிறது!! உறுதியாகக் கூறுகிறது!!! எனவேதான், இதே இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் உரிய முழுமுதல் தலைமைக் குருபீடம், "**குவலய குருபீடம்**" என்றும், இந்தக் குருபீடத்தின் குருதேவர் "**ஞாலகுரு**" என்றும், இதன் ஆச்சாரியார் "**ஞானாச்சாரியார்**" என்றும், இதனுடைய ஆதினம் "**கருமூல ஆதினம்**" என்றும், இதன் தம்பிரான் "**அனாதிஆதி கடந்த தம்பிரான் அடிகளார்**" என்றும், இதன் சன்னிதானம் "**குருமகா சன்னிதானம்**" என்றும் <u>இம்மண்ணுலகம் முழுவதற்கும் தலைமை தாங்குபவர்</u> என்ற பொருளில் அமைந்திருக்கின்றன.

*// 'அருளுலக ஆச்சாரியார் பாரம்பரியம்' என்ற கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்ட பகுதி. //*

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."

- குருபாரம்பரிய வாசகம்








11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த **ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-